## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.91/2022</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **22.01.2026** |
| **பெயர்** | **பாளையம் (எ) ஏழுமலை** |
| **த/பெ** | **பொன்னுசாமி** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.15 a.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் பூர்வீக சொத்தில் என்னுடைய பாகத்தினை கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து சர்வே எண்.67 அதன் வீஸ்தீரணம் 3 ஏக்கர் 85 செண்ட் ஆகும். 3 ஏக்கர் 85 செண்ட் நிலத்தினை யார் கிரையம் பெற்றார்கள் என்றால் மண்ணக்கண்ணி மற்றும் முருகையம்மாள் கிரையம் பெற்றார்கள். மேற்சொன்ன இருநபர்களும் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் தனித்தனியாக பாகம் பிரித்து கொண்டு விவசாயம் செய்து வந்தார்கள் எந்த வருடம் பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. மண்ணக்கண்ணிக்கு 1 ஏக்கர் 92 செண்ட்டும், முருகையம்மாளுக்கு 1 ஏக்கர் 93 செண்ட் என்று பாகம் பிரித்துக்கொண்டார்கள்.

மண்ணக்கண்ணிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள் ஆவர்கள் அவர்கள் பெயர் என்னவென்றால் நைனார், அமாவாசை மற்றும் மற்றொருவர் பெயர் தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களின் மூலம் மத்திய பகுதியில் உள்ள 1 ஏக்கர் 92 செண்ட் (தங்கராஜ் வகையறா 64 செண்ட், துரைகண்னு வகையறா 64 செண்ட்) விற்கப்பட்டதற்கான ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் **பி.வா.சா.ஆ.1 முதல் 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் ஆட்சேபனையுடன் மேற்சொன்ன ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.) 3 ஏக்கர் 85 செண்ட்டில் நடு பாகம் தான் விற்பனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 93 செண்ட்டில் மேற்கு பக்கமாக 70 செண்ட் மற்றும் கிழக்கு பக்கம் 1 ஏக்கர் 23 செண்ட் முருகையம்மாளுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. முருகையம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே மகன் அவர் பெயர் பொன்னுசாமி. முருகையம்மாள் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. முருகையம்மாளின் பாகமான 1 ஏக்கர் 93 செண்ட் ஒரே வாரிசு என்ற முறையில் பொன்னுசாமி வந்து அடைந்ததா என்றால் ஆம்.

3. பொன்னுசாமிக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவியின் பெயர் பார்வதி இரண்டாவது மனைவியின் பெயர் சொக்கம்மாள். பொன்னுசாமிக்கு மொத்தம் ஐந்து பிள்ளைகள் ஆவார்கள். முதல் மனைவி பார்வதிக்கும் பொன்னுசாமிக்கும் ஒரு மகன் அவரது பெயர் காட்டையன். காட்டையன் இறந்துவிட்டார். அவருடைய இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. காட்டையன் மனைவி பெயர் ஜோதி அவர்களின் பிள்ளைகள் ஷர்மிளா, சுமதி, சரவணன் மன்றும் மதி ஆவார்கள். காட்டையன் வாரிசுகளை

பிரதிவாதிகளாக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். சொக்கம்மாள் இறந்துவிட்டார். அவருடைய இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பொன்னுசாமி மற்றும் சொக்கம்மாளுக்கு நான்கு பிள்ளைகள் அவர்கள் பாவனி, மேனகி, குபேந்திரன் மற்றும் பாளையம் (எ) எழுமலை. பொன்னுசாமியின் இரண்டாவது மனைவியை திருமணம் செய்தபோது முதல் மனைவி உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை இறந்துவிட்டார்.

4. முருகையம்மாளுக்கு 1 ஏக்கர் 93 செண்ட் தவிர வேறு நிலங்கள் இருந்ததா என்றால் இருந்தது சர்வே எண்.91 ல் 2 ஏக்கர் 16 செண்ட் நிலம் இருந்தது. அதுதவிர வீட்டு மனைகளும் இருந்தது. பார்வதிக்கும், பொன்னுசாமிக்கும் அடிக்கடி சண்டை ஏற்படும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஆதிதிரவிட பொது நல சங்கத்தில் சொத்து பிரச்சனை குறித்து பார்வதி வகையறாவுக்கும், சொக்கம்மாள் வகையறாவுக்கும் மத்தியஸ்தம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பார்வதியின் ஒரே மகன் காட்டையனிடம் மேற்சொன்ன பிரச்சனையை பயன்படுத்தி வா.சா.ஆ.2 ஆவணத்தில் நிறைவேற்றினோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொக்கம்மாளின் இரண்டு மகன்களுக்கும் எழுதப்பட்டது என்றால் மைனர் பாளையம் மற்றும் மைனர் குபேந்திரன் எங்கள் இருவருக்கும் பார்வதியின் மகனான காட்டையன் கிழக்கு பக்கமாக உள்ள 70 செண்ட் நிலத்தை செட்டில்மெண்ட்டாக எழுதிக்கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மைனர்கள் என்று தான் எங்களை குறிப்பிட்டுள்ளது என்றால் என் தாயார் ஆன சொக்கம்மாள் காப்பாளராக காண்பித்து தான் வா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்டது. என்னுடைய ஆதார் அட்டையில் என் பெயர் ஏழுமலை என்று தான் உள்ளது.

5. மேற்சொன்ன குபேரன் மைனராக இருந்தபோதே இறந்துவிட்டார் என்றால் 14 வயதில் இறந்துவிட்டார். ஆதார் அட்டையில் என் பெயர் ஏழுமலை என்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் பாளையம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னை இரண்டு பெயர்களிலும் அழைப்பார்கள். என்னுடைய பெயரினை அரசு ஆவணத்தில் மாற்றினேனா என்றால் மாற்றவில்லை. என் பெயர் பாளையம் என்பதை காட்ட நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பாளையம் என்பவர் வேறு ஒரு நபர் என்றால் சரியல்ல. நான் தான் அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பாளையம் என்பதை காண்பிக்க எந்த அரசு ஆவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் 1977 ல் பிறந்தேன். என்னுடைய ஆதார் அட்டை மற்றும் பிற அடையாள அட்டைகளின் நான் பிறந்த வருடம் 1979 என்றே இருக்கும். அவ்வாறு இருப்பின் வா.சா.ஆ.2 பத்திரம் 1978 ல் நிறைவேற்றும் போது நான் பிறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1977 ல் பிறந்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய அடையாள அட்டைகளில் தவறுதலாக உள்ளது. பார்வதி வகையறாவுக்கும், சொக்கம்மாள் வகையறாவுக்கும் இடையே பாகப்பிரிவினை எதுவும் உள்ளதா என்றால் இல்லை, வா.சா.ஆ.2 ஆவணம் மட்டும் தான் உள்ளது.

6. சாட்சி தற்போது பொன்னுசாமிக்கும், காட்டையன்னுக்கும் இடையே வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது. காட்டையனுக்கும், பொன்னுசாமிக்கும் அவர்களின் பூர்வீக சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள். யார் யாருக்கு எந்தெந்த பாகம் கிடைக்கப்பெற்றது

என்றால் சர்வே எண்.91 ல் 2 ஏக்கர் 16 செண்ட் இருவருக்கும் சமபாகமாக பிரித்துக்கொள்ளப்பட்டது. (வாதி தரப்பு வழக்கறிஞரின் இதில் பாகப் பிரிவினை வழக்கு அல்ல என்றும் நிறந்தர உறுத்துக்கட்டளை வழக்கு என்றும் ஆட்சேபனைக்கு இணங்க பதிவு செய்யப்படுகிறது.)

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 12.00 p.m.**